ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1995), மாண்புமிகு சட்ட அமைச்சர்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1995)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜி. பழனிசாமி.*

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தமிழ்நாடு மாவட்டக் காவற்படை (திருத்தச்) சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்தை நான் கூறவிரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக, கேளிக்கை வரியை கள்ளத்தனமாக சினிமா டிக்கட்டுகளை விற்பனை செய்வதன்மூலம் ஏய்க்கிறவர்களைத் தடுக்க, இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் மாவட்ட காவல்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில், தமிழ்நாட்டில் இருக்கிற சினிமா தியேட்டர்களில், குறிப்பாக நடிகர் நடிகைகளின் பெயரால் மன்றங்கள் வந்ததன் காரணமாக அந்த மன்றங்களின் சார்பாக, நடிகர் நடிகைகளுக்கு விழா எடுக்கிற நோக்கத்தோடு, அவர்கள் நடித்த படங்களுக்கான ஊர்வலங்களை தமிழ்நாட்டிலே நடத்தி, அந்தத் தியேட்டர்கள் முன்பாக மிகப்பெரிய விளம்பரங்களைச் செய்து, விழா எடுத்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், தியேட்டர்

@3-11-1995-ஆம் நாளைய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

உரிமையாளர்களிடத்திலே ஒட்டுமொத்தமாக டிக்கட்டுகளை வாங்கி வெளியிலே தங்களுடைய இஷ்டம் போல விற்று, உதாரணமாக 10 ரூபாய் 5 ரூபாய் டிக்கட்டுகளை 100 ரூபாய் 50 ரூபாய் என்ற அளவிலே விற்று விளம்பரம் செய்யக்கூடிய நிலைமைகளை நம்மால் காணமுடிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-05

***மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளிக்கைகள் வரி திருத்தச் சட்டத்தை தனியாக நான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள கோர இருக்கிறேன். இப்போது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்த பில்லின்மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி பேசினால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவினுடைய நோக்கம் மிகச் சுருக்கமானது. இன்றைக்கு சென்னை மாநகர காவல் சட்டத்தில் இங்கே கள்ளத்தனமாக சினிமா டிக்கெட்டுகள் விற்றால் அதன்மீது நடவடிக்கையெடுக்க சென்னை நகர போலீசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் மாவட்டங்களில் போலீஸ் அதிகாரிகள் அந்த நடவடிக்கையெடுக்க அங்கே 'லக்குனா' இருக்கிறது. அதனை நிவர்த்தி செய்ய மட்டுமே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, அது வேறு, இது வேறு. இந்த சட்டம் மாவட்டங்களுக்கு வேண்டுமா வேண்டாமா என்பது. அது பற்றி நீங்கள் பேசலாம்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையில் சென்னை மாநகரத்திற்கு மட்டுமல்லாமல் பல்வேறு மாவட்டங்களுக்கும் இதை கொண்டு வருகிறீர்கள். இது வரவேற்கப்பட வேண்டியது தான். சட்டத் திருத்தங்களை மட்டும் கொண்டு வந்ததன் மூலமாக எந்தத் தீர்வும் நாம் கண்டு விட முடியாது. மாவட்டந்தோறும் காவல் துறையினருக்கு இருக்கக்கூடிய சட்டத்தின் கீழேயே சூதாட்டங்கள், பகிரங்கமாக கிளப் வைத்து நடத்துவது போன்ற நடவடிக்கைகளை தடை செய்து கைது செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே இதற்கு தனியாக சட்டத் திருத்தம் செய்து செய்ய வேண்டும் என்பதல்ல. அப்படி சட்டத் திருத்தம் கொண்டு

வந்து தமிழ்நாடு முழுவதும் இருக்கிற எல்லா மாவட்டங்களுக்கும் காவல் துறைக்கு அதிகாரம் வழங்குகிறபோது, காவல் துறை உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்று சொன்னால் இன்றைக்கு இதுபோன்று நடவடிக்கை எடுப்பதில்லை. பல்வேறு நகரங்களில், கிராமங்களில், தாலுகாகளில் சூதாட்டங்கள் நடைபெற்று கொண்டு தான் இருக்கிறன. குறிப்பாக பல்வேறு இடங்களில் கிளப் வைத்து நடத்துகிறார்கள். இதையெல்லாம் கூட காவல் துறை கண்காணிப்பதில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல் இதிலே உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் அளிக்க வேண்டும். இதிலே 100 ரூபாய் அபராதம், இல்லையென்றால் மூன்று திங்கள் சிறை தண்டனை என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சட்டங்களில் இருக்கிற ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு இன்றைக்கு பல்வேறு இடங்களில் காவல் துறையினுடைய பினாமி அனுமதியோடு கூட சூதாட்டங்கள் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலும் அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும். இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறபோது இப்படி தவறுகள் நடந்தால் அந்த காவல் சரகத்தில் இருக்கிற அதிகாரி மீதும் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இதற்கு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தாகி விட்டது. அடுத்து போலித்தனமாக லாட்டரி சீட்டுகள்... (குறுக்கீடு) அதற்கு பில் தனியாக வருகிறது என்றால் அப்போது என் கருத்துகளைச் சொல்லுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல இன்றைக்கு நடைமுறையிலே இருக்கிற–Tamil Nadu Cinema Regulation Act, 1955 for compounding of offences is provided. இன்றைக்கு மாவட்டங்களில் இந்த குறைபாடுகள் நடக்கிறபோது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் அங்கே ஃபைன் மட்டுமே போடப்படுகிறது. தண்டிக்கப்படுவதில்லை. Hence it could not be stopped since it is very easy to remit the fine on the spot and the offences will be continued. எனவே ஃபைனை கட்டிவிட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு உறுப்பினர் இதில் பேசுகிறார்.

1995 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: இந்த விவரங்களைச் சொல்லி விடுகிறேன். பிறகு அவர் பேசட்டும். எனவே ஃபைனை கட்டி விட்டு மீண்டும் மீண்டும் அந்தத் தவறுகளைச் செய்கிற காரணத்தால் இதைக் கடுமையாக, எஃபக்டிவாக ஆக்க வேண்டும் என்பதற்காக, இந்த சென்னை மாநகராட்சியிலே அந்த சட்ட வாய்ப்பு இருக்கிறது. Extension of Section 34(a) of the City Police Act is provided. எனவே இங்கே இருக்கிற இந்த சட்டத்தினுடைய ஷரத்தை மாவட்ட போலீஸ் ஆக்ட்டில் புகுத்துவது தான் இதனுடைய நோக்கம். அதன்மூலம் இந்தக் குறைபாடுகள் போகும் என்று இந்த அரசு மனதாரக் கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், இருந்தாலும்கூட இன்னும் சில திருத்தங்களை இதிலே நீங்கள் கொண்டு வந்தால்தான் நீங்கள் நினைக்கிற நோக்கம் இங்கே ஈடேற முடியும். சாதாரணமாக பிளாக் டிக்கட் விற்பவர்களை நீங்கள் ஒரு நூறு ரூபாய் அபராதம் மட்டும் போட்டு விட்டோ, மூன்று திங்கள் சிறை தண்டனை கொடுத்துவிட்டோ சரிபடுத்தலாம் என்கிறீர்கள். Rs.100/- fine or imprisonment for three months. ஆனால் பொதுவாக நீதிமன்றத்திற்கு செல்கிறபோது அந்த 100 ரூபாய் அபராதத்தை கட்டிவிட்டு அவர்கள் அதே செயலை மீண்டும் மீண்டும் செய்யக்கூடும்.

பிற்பகல் 12–10

அப்படிப்பட்ட ஒரு நிலைமையைத் தவிர்க்கவேண்டும் என்று சொன்னால், இதுபோன்ற குற்றங்களைச் செய்பவர்கள் மீது கடுமையான தண்டனை இருக்கவேண்டும். ஜாமீனில் விட முடியாத அளவிற்கு இருந்தால்தான், இப்படிப்பட்ட நிலைமைகள் வராமல் தடுக்க முடியும். இன்னும் சொல்லப்போனால், வெறும் போலீஸிடம் மட்டுமே இந்த அதிகாரத்தைக் கொடுத்துவிட்டீர்கள் என்று சொன்னால் சரியாக இருக்காது. பிளாக் டிக்கெட் விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, போலீஸிடம் மட்டும் அதிகாரத்தைக் கொடுத்தாலும்கூட, இதுபோன்ற கள்ள டிக்கெட்டுகள் பெரும்பாலும், சினிமாக் கொட்டகைகளிலிருந்துதான் வெளியே வருகின்றன. சினிமாக் கொட்டகைக்காரர்கள் லாட்டாக 300 டிக்கெட், 200 டிக்கெட், 100 டிக்கெட் என்று மொத்தமாக கொடுத்துவிடுகிறார்கள். அந்த சினிமாக்

கொட்டகைக்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதைப் பற்றி இதிலே ஒன்றுமே காணோம். ஆகவே, அத்தகைய குற்றங்கள் நிகழ்வதற்கு முக்கியமான காரணமே, சினிமாக் கொட்டகைக்காரர்கள்தான். அத்தகைய சினிமாக் கொட்டகைக்காரர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கும், எந்தவிதமான சட்டக்கூறுகளும் இதிலே இல்லை. அதை நீங்கள் ஆராயவில்லை. அப்படிப்பட்ட தியேட்டர்காரர்களையும் குற்றவாளிகளாகச் சேர்த்து, அவர்கள் ஏதாவது ஒருவழியிலே சிறைத் தண்டனை அடைந்தாலோ, அல்லது அபராதம் செலுத்தினாலோ, அவர்களுடைய சினிமாக் கொட்டகை ஒரு வாரத்திற்கு நிறுத்தி வைக்கப்படும், சஸ்பெண்ட் செய்யப்படும் என்ற வகையில், விதிகளைக் கொண்டுவந்தால்தான் இந்தக் கள்ள டிக்கெட் விற்பவர்களைத் தடுக்க முடியும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள்கூட பேசும்போது சொன்னார்கள், காவல்துறையைப் பொறுத்தவரையில், அவர்கள் சில நேரங்களில் வெறும் பந்தோபஸ்து, பந்தோபஸ்து என்று சொல்லிவிட்டு, வெளியே போய்க் கொண்டிருக்கிறார்கள். வருவதே கிடையாது. சில நேரங்களில் பந்தோபஸ்து என்று வந்துவிட்டால், அதற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைப் பேசினாலும் அதிலே ஏதாவது குற்றச்சாட்டை இழுத்துப்பிடித்துச் சொல்லவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். இந்த பில்லிலே என்ன நல்லது கெட்டது இருக்கிறது என்பதைக் குறித்துப் பேசவேண்டும். உங்களுக்கு ஏதாவது மனக்குறை இருந்தால், ஆதங்கம் இருந்தால், அதனை வேறுவிதமாகத் தெரிவித்துக் கொள்ளுங்கள். தேவையில்லாமல், இதையெல்லாம் சொல்வது, அவ்வளவு சரியாக இல்லை. பந்தோபஸ்து என்று சொல்கிறபோது, உங்களுடைய அமைச்சர்கள் மத்தியிலேயிருந்து வருகிறார்கள் நேற்றையதினம் துணை ஜனாதிபதி அவர்கள் வந்தார்கள், அப்போதெல்லாம் பந்தோபஸ்து கொடுக்கவேண்டாம் என்று சொல்கிறீர்களா? எனவே, தயவுசெய்து, இதிலே உள்நோக்கம் கற்பித்து

எதையாவது சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லக்கூடாது. இந்த பில்லிலே என்ன பேசவேண்டுமோ அதைப் பேசவேண்டும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதையோ நினைத்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஞானசேகரன், நீங்கள் ஒரு தவறான முன்னுதாரணத்தைப் பின்பற்றுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தகுந்த பதிலைச் சொல்கிறார்கள். எனவே, இந்த பில்லின் மீது பேசவேண்டுமே தவிர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நீங்கள் திரும்ப ஒரு தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எதையும் நினைத்துச் சொல்லவில்லை. திரு. ஞானசேகரன் அவர்களை நினைத்துத்தான் சொல்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, What I want to say is always the Police have been deputed only for bandobust purposes.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மிகத் தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன். ஒரேயொரு அம்சத்திற்காக, சென்னை மாநகராட்சி போலீஸ் சட்டத்திலே, கள்ள டிக்கெட்டுகளை விற்பவர்களைத் தண்டிக்க அதிகாரம் இருக்கிறது; மாவட்ட போலீசுக்கு அந்த அதிகாரம் இல்லை, அதனை விரிவுபடுத்துகிற ஒரு அம்சத்திற்கு மட்டும் தான் இந்த பில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று. உங்களுக்கு மற்ற குறைகள் இருந்தால், மற்ற மற்ற மசோதாக்கள், அல்லது அமைச்சர்களுடைய மானியங்கள் வருகிறபோது அதைச் சொல்வது உகந்தது. எனவே, இதுபற்றி மட்டும் தயவுசெய்து தங்களது எண்ணத்தைச் சொல்லக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஞானசேகரன், சட்டத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இரண்டு முறை அதற்கான விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் நீங்கள் வேறு விவாதத்திற்குப் போகாமல், இந்த பில் எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ, அந்த நோக்கத்திற்கு உட்பட்டு மட்டுமே நீங்கள் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதன் நோக்கமே, கள்ள டிக்கெட் விற்கக்கூடாது என்பதுதான். கள்ள டிக்கெட்டை விற்காமல் தடுப்பது பற்றித்தான். இதிலே சில திருத்தங்களை நான் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். வழக்கறிஞர் என்ற முறையில் உங்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சென்னையிலே இருக்கிற அதிகாரத்தை மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்கலாமா, வேண்டாமா என்பதுதான் ஒன்று, வேண்டாம் என்று சொல்லுங்கள், அல்லது கொடுக்கலாம் என்று சொல்லுங்கள். அதோடு நிறுத்துங்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவர் அவர்களே, டிக்கெட்டுகளை விற்பது, அல்லது சினிமா எப்படி நடத்துவது என்பதற்கு எல்லாம் தனிச் சட்டங்கள் இருக்கின்றன. அதற்கு விவாதம் வருகிறபோது இந்தக் கருத்தைச் சொன்னால் உகந்ததாக இருக்கும். கள்ள டிக்கெட்டுக்கள் விற்பதைத் தடுக்க சென்னையில் உள்ள போலிஸுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் மாவட்ட போலிஸ் சட்டத்திலே அது இல்லை. There is a lacuna அதனை நிறைவேற்றத்தான் இந்தச் சின்னத் திருத்தம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சின்ன திருத்தம்தான். ஆனால் இது பெரிய விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிற காரணத்தால்தான் நாம் இதைக் கொண்டு வருகிறோம். அப்படிக் கொண்டு வருகிறபோது மெட்ராஸ் சிட்டி போலிஸ் ஆக்ட் மபசல் ஏரியாவிற்கு அப்ளை ஆகுமா, ஆகாதா என்று சில நேரங்களிலே பிரச்சினை வருகிறபோது, அதற்கு தனியாக அரசு ஒரு டிக்ளரேஷன் கொடுக்க வேண்டும். கிராமப்புறங்களிலே நடக்கக்கூடிய குற்றங்களுக்கு மெட்ராஸ் சிட்டி போலிஸ் ஆக்ட்டோ, அல்லது டிஸ்ட்ரிக்ட் போலிஸ் ஆக்ட்டோ அப்ளை ஆகாது என்று சொல்லி, எத்தனையோ பேர்கள் தப்பித்துக் கொண்டு போயிருக்கிறார்கள். நீங்கள் மபசல் ஏரியாவிற்கும் இதை விரிவுபடுத்துவதற்கு உண்மையிலே நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

1995 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அனுபவங்களின் அடிப்படையில் தான் இதைக் கொண்டு வருகிறோம். குறிப்பாக தூத்துக்குடியில் அது நடைபெற்றது. உடனடியாக அதை நிறைவேற்ற முடியவில்லை. இப்படி பல போலிஸ் அதிகாரிகள், சென்னை மாநகராட்சியில் உள்ள போலிஸ் அதிகாரிகளுக்கு இருக்கிற அதிகாரம் எங்களுக்கும் வேண்டும், அப்போதுதான் தீவிரமாக எஃபக்டிவ்வாக இம்ப்ளிமெண்ட் செய்ய முடியும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்கத்தான், - அவர்கள் சொன்னதைப் போல, அங்கேயும் இதுபோன்று இருக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான், It has been extended to the mofussil.

முற்பகல் 12-15

திரு. சி. ஞானசேகரன்: கிராமப் பகுதிகளில் இந்தச் சட்டத்தை மீண்டும் பரப்புவதை நான் உண்மையிலே மீண்டும் வரவேற்கிறேன். இருந்தபோதிலும் ஏற்கெனவே சினிமா கொட்டகையில் விற்கப்படும் கள்ள டிக்கெட்டுகளின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கென ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமெனக் கேட்டு, நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1995) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.